2018 ஜூன் 7]

சார்ந்த Demand-*ல் நாங்கள் அறிவிப்பாக வெளியிட்டிருக்கிறோம். ஆகவே, இனிமேல் இடையில்* road cutting *எல்லாம் வராது. ஆகவே, இதற்கு முன்பு பார்த்தோம் என்றால், குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் சரி, அதைப்போல பாதாள சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி, பைப் லைன் போடும் போது, எவ்வளவு* cut *செய்து எடுக்கின்றோமோ, அந்த அளவுக்குத்தான் போடுவோம். மூன்று அடிக்கு நாம்* cut *செய்து எடுக்கிறோமென்றால், 3 அடிக்கு மட்டும்தான் சாலையைப் போடுவோம். இப்போது அதனை மாற்றி, முழுமையாகப் போட்டால்தான் சாலை சரியாக இருக்கும் என்கின்ற காரணத்தினால், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலைப் பணியினை கண்டிப்பாக எடுத்துக்கொண்டு விரைவில் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

ஐஸ்கட்டி தொழிற்சாலை

***12688—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழவேற்காட்டில் ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பழவேற்காட்டில் ஐஸ்கட்டி நிலையம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2018 ஜூன் 7

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானவர் வணங்கும் மலை மகள், தரணியைக் காத்த தலைமகள், எங்கள் உயிராக, ஊனாக, மூச்சாக விளங்கிய முத்தமிழ் நாட்டின் முதல் மகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தாயின் ஆட்சியைத் தடம் மாறாது, தமிழகம் செழிக்க காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கவும், தூத்துக்குடி மக்களின் கனவை நனவாக்கும் வகையில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உத்தரவிட்டும், வெற்றியின் சிகரமாய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அன்பின் உருவமாய், அமைதியின் வடிவமாய், கட்சிக்கும், ஆட்சிக்கும் துணை நிற்கும் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் அன்போடு வணங்குகிறேன்.*

என்னுடைய பொன்னேரி தொகுதியை உள்ளடக்கிய பழவேற்காடு பகுதியில் 36 மீனவக் குப்பங்கள் உள்ளன. அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டும், மீன் பிடிக்கும் மீனவர்களின் நலன் கருதியும், மீன், இறால், நண்டு மற்றும் உயர் வகையான மீன் வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற காரணத்தாலும், ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது, அங்கு தனியார் ஐஸ்கட்டி தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பருவ நிலைகளுக்கேற்ப 20 கிலோ, 50 கிலோ, 100 கிலோ எடை கொண்ட ஐஸ்கட்டிகளை அதிக விலைக்கு தனியார் ஐஸ்கட்டி தொழிற்சாலைகள் விற்பனை செய்கின்றன. எனவே, கடலுக்குச் சென்று தன் உயிரைப் பணயம் வைத்து மீன்பிடித்து வருகின்ற மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஐஸ்கட்டி தொழிற்சாலை

2018 ஜூன் 7]

அமைத்துத் தருமாறு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, முகத்துவாரத்தினை ஆழப்படுத்தும் திட்டத்திற்காக 30 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியதையடுத்து, அதற்கான கோப்பு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் தற்போது உள்ளது. அக்கோப்பிற்கு உரிய அனுமதியை பெற்று, அந்தப் பணியையும் துவங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு ஐஸ் வைத்துப் பேசினாலும், அங்கு ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க முடியாது. பழவேற்காடு பகுதியில் கிட்டத்தட்ட 54 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. 7 ஆயிரம் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகிறார்கள். தற்போது, கோட்டை, பூமிக்கோட்டை ஆகிய இரண்டு பகுதிகளில் ஐஸ்கட்டி நிலையம் இயங்கி வருகிறது. இவைதவிர, N.G.O. மூலமாக அனக்கருப்பம் பகுதியில் ஐஸ்கட்டி தயார் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தேவைப்படுமெனில், சிறுணியம் பலராமன் அவர்கள் ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க முன்வருவாரேயானால், அவருக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்துதர அரசு தயாராக இருக்கிறது.*

மேலும், பழவேற்காடு பகுதி, 1991 ஆம் ஆண்டிற்கு முன்பு Inland Fisheries Society-ன்கீழ், அதாவது, உள்நாட்டு மீன்வளக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் இருந்து வந்தது. அதனால், எந்தவொரு சலுகையையும் பெற முடியாத சூழ்நிலை அவர்களுக்கு அந்தக் காலகட்டங்களில் இருந்தது. தற்போது அவர்களை கடல் மீனவர்களாக மாற்றியதால், எல்லாச் சலுகைகளையும் பெறுகின்ற ஒரு நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட அனைத்துத் திட்டங்களும் தற்போது அவர்களுக்குச் சென்றடைகின்றன. தற்போது நடைபெற்ற மீன் வளத் துறை பற்றிய

மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது, அறிவிக்கப்பட்ட அறிவிப்பில் இப்பகுதிக்காக 8 கோடியே 30 இலட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக முகத்துவாரங்களில் பிரதானமாக கடல் நீர் உள்ளே வரும்போதுதான் மீன் இனப்பெருக்கம் அதிகமாக இருக்கும். அந்த முகத்துவாரம் அடைபட்டதன் காரணமாக, மீன் இனப் பெருக்கம் குறைவாக இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு, அரசு இந்த வருடம் 8 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு scheme, அதாவது செயற்கை பவளப் பாறைகளை உருவாக்கி அந்த இடங்களில் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. இதன்மூலம் மீன் இனவிருத்தி அதிகமாகும். 7,000 மீனவர்கள் அந்த ஏரியை நம்பி இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

அதேபோன்று, முகத்துவாரம் அடைபடாமல் இருக்கும் வகையில், வனத் துறையினுடைய Coastal Regulatory Zone-ன் அனுமதியைப் பெற்று, முகத்துவாரத்தைக்கூட ஆழப்படுத்தி, அகலப்படுத்துவதன்மூலம் கடல் நீர் உள் புகும் சூழ்நிலை ஏற்படும். அதுவும்கூட இனப் பெருக்கம் அதிகரிக்க வழிவகுக்கும். தற்போது, அங்கு தோராயமாக 2 டன் அளவில்தான் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அதற்குத் தேவையான, முழுமையான அளவில் ஐஸ்கட்டிகள் இருக்கின்ற காரணத்தினால், ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க இயலாது. எனினும், வருங்காலங்களில் அதிக அளவில் மீன்கள் பிடிக்கப்படும்பட்சத்தில், ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைப்பது குறித்து அரசு யோசிக்கும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, ஐஸ்கட்டி தொழிற்சாலை அமைக்க முன்வந்தால்கூட அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்து தரும். எனவே, அவர் வைத்த ice-க்கு என்னுடைய ice-ஆன பதிலை இந்த அளவோடு சொல்லி நான் அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் இருங்கள். அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதில் மிகவும் nice

2018 ஜூன் 7]

ஆக இருந்த காரணத்தால், அவருடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஏழையெளிய மீனவர்கள், வேளாண் பெருமக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த, நவீன வகை மீன்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்வதோடு, 8 கோடியே 30 இலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார், விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *வாழும் வள்ளுவராக வாழும் தலைவர் கலைஞர் அவர்களையும், ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து, ஓயாமல் உழைக்கிற எங்கள் செயல் தலைவர், தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில் கொள்ளிடம் ஆற்றங்கரையில் இருக்கக்கூடிய பகுதி அணைக்கரை. காவிரி பெருக்கெடுத்தால் கொள்ளும் இடம் கொள்ளிடம் என்று சொல்லுகிற கொள்ளிடத்தில் உள்நாட்டு மீனவர்களுடைய வேண்டுகோளுக்காக கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மீன் விற்பனைக்குரிய சந்தைக்கூடம் அமைத்துத் தந்திருக்கிறேன். பல மீனவர்கள், விற்பனையாகாத மீன்களை, மீன் செத்தால் கருவாடு என்பதைப்போல், மறு நாள் கருவாடாக விற்கிற நிலை ஏற்படுகிறது. எனவே, நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடத்தில் மீன்களை வைத்து மறுநாள் விற்பனை செய்ய குளிர்சாதனப் பெட்டி-ஐஸ் பதனிடப்பட்ட அறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். துறையின் கேள்வியாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். ஒரு கேள்விதான் கேட்க வேண்டும், உட்காருங்கள். மாண்புமிகு மீன்*

வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் செத்தால் கருவாடு என்பதால்தான், கருவாட்டுக்குக்கூட 5 சதவிகித ஜி.எஸ்.டி. வரி போட்டார்கள். அந்த 5 சதவிகித வரியைக்கூட இல்லாமல் செய்த அரசு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அணைக்கரை பகுதியில் உள்நாட்டு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பதப்படுத்த குளிர்சாதனப் பெட்டி வசதி வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அது நியாயமான கோரிக்கை. நிச்சயமாக அரசு அதைக் கருத்தில்கொண்டு, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதியைப் பொறுத்தவரையில், நம்முடைய மாவட்ட அமைச்சர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் சிறு தொழில் மூலமாகக்கூட அங்கே அந்த ஐஸ் கட்டி நிலையத்தை அமைப்பது தொடர்பாக அவருடைய மானியக் கோரிக்கையில் தகவல் அளிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

146—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***6874—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?